Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 22 | 06 - 07 - 1992 | திங்கட்கிழமை | ஓசை 139

## கடவுச்சீட்டிற்கான புகைப்பட அளவுகளில் மாற்றம்

கடவுச் சீட்டிற்கான புகைப்படங்களின் அளவுகளில் தற்போது மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. இதுகாலவரை கடவுச்சீட்டிற்கான புகைப்பட அளவு 6 செ.மீ X 4.5 செ.மீ ஆக இருந்து வந்தது. இனிமேல் கடவுச் சீட்டிற்கான புகைப்படம் 4.5 செ.மீ X 3.5 செ.மீ அளவுடையதாக இருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது எனவே கடவுச்சீட்டுக்கான விண்ணப்பதாரர்கள் அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு புகைப்படங்களுடைய அளவு சம்பந்தமான தேவைகளைப் பின்பற்றும்படி குடிவரவு குடியகல்வு திணைக்களம் கேட்டுள்ளது.

# இயக்கச்சியில் சீன ராட்சத விமானம்

# புலிகளால் நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டது

## ஆறு விமான ஓட்டிகள் உட்பட 19 விமானப் படையினர் பலி

(யாழ்ப்பாணம்)


நேற்று மாலை இயக்கச்சிப் பகுதி மீது பீப்பாக் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த வை - 8 சீன (சகடை) விமானம் ஒன்றை விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினர் சுட்டு வீழ்த்தினர். புலிகளின் விமான எதிர்ப்பு பீரங்கியின் ரவைகள் விமானத்தை துளைத்துச் சென்ற போது விமானம் தீப்பற்றி ஆகாயத்தில் வெடித்துச் சிதறியது. இதில் இருந்த 6 விமானிகள் உட்பட 19 பேரும் கொல்லப்பட்டனர் இந்த விமானத்தின் சகல உதிரிப்பாகங்களும் ஒரு விமான ஓட்டியின் உடலும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்த விமானத்தில் சென்ற ஏனைய விமானப்படையினரின் உடல்கள் அடையாளம் காண முடியாதவாறு சுக்குநூறாக சிதறிப்போயிற்று.

நேற்றுமாலை புல்லாவெளி, வாடியடி, இயக்கச்சி பகுதிகளில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. இதில் சீன தயாரிப்பு வை - 8 விமானமும், அவ்ரோ, மார்ச்செட்டி விமானங்களும் ஈடுபட்டிருந்த இந்நிலையில். மாலை சுமார் 4 45 மணியளவில் இயக்கச்சிப் பகுதியில் வை-8 விமானம் ஒன்று பீப்பாக் குண்டுகளை வீசிய வண்ணமிருந்தது. இவ் விமானம் ஒன்பது குண்டுகளை வீசிய நிலையில், பத்தாவது குண்டை போடும் போது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விமான எதிர் தாக்குதலினால் விமானம் வெடித்துச் சிதறியது

இந்த விமானத்தில் இருந்த ஆறு விமான ஓட்டிகள் உட்பட 19 விமானப்படையினர் கொல்லப்பட்டதாக வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நள்ளிரவு தெரிவித்தது.

வானில் வெடித்துச் சிதறிய விமானத்தின் சிதைவுகள் கிளாலி வெட்டைப் பகுதியில் வீழ்ந்தன. இச் சிதைவுகளின் பகுதிகள் பல புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதே வேளை இவ் விமானத்தில் இருந்த சகலரும் உடல் சிதறி

(4ஆம் பக்கம் பார்க்க)



இயக்கச்சியில் விடுதலைப் புலிகளால் நேற்று மாலை சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 சீன விமானத்தினை மேலே காண்கிறீர்கள்.

## வீரச்சாவு

### வீரவேங்கை தமிழினியன்

புல்லா வெளியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் சிறிலங்கா படையினரின் இரண்டு கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன. மாலையில் விடுதலைப்புலிகள் ஒரு வை- 8 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்

## வை - 8 விமானம்

ரசிய விமானமாகிய AN - 12 B இராணுவ குடியியல் போக்குவரத்து விமானத்தினைச் சீனாவில் தயாரிக்கும் போது, Y - 8 விமானம் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இது நான்கு டேர்போ புறப்பலறைக் கொண்டிருக்கும் இதனை இயக்குவதற்கு 5 பேர் தேவைப்படுவர். இந்த Y - 8 விமானத்தையே எமது மக்கள் சகடை என அழைக்கின்றார்கள். இந்த விமானத்தில் 96 துருப்புக்களை அல்லது 58 பரசூட் துருப்புக்களை ஏற்றிச் செல்லலாம் அல்லது 60 படுகாயமடைந்தோருடன் 20 சிறுகாயமடைந்தோர் மற்றும் 05 தாதியரை கொண்டு செல்லும்.

# வாடியடிப் பகுதியில் கடும் சமர்

[illegible]

# இராணுவத்திற்கு பாரிய உயிரிழப்பு

(இயக்கச்சி)
மண்டலாயிலிருந்து வாடியடி சந்திக்கு முன்னேற முயன்ற இராணுவ அணிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் நேற்றுக் கடும் சமர் மூண்டது நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை தொடர்ந்து நடைபெற்ற மோதல்களின் போது சிறிலங்கா இராணுவ தரப்பில் பெரிய உயிரிழப்பு ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் புல்லாவெளி பகுதியில் இருந்தும், மண்டலாய் பகுதியிலிருந்தும் பெருமளவு இராணுவத்தினர் வாடியடி நோக்கி முன்னேறும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

கடும் பீரங்கித் தாக்குதலுடனும், விமானப்படையின் அகோரக் குண்டு வீச்சுடனும் ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கைகளை எதிர்த்து புலிகள் கடும்சமர் புரிந்தனர் இச்சமர் பல மணி நேரம் நீடித்தது மாலைவரை இடம் பெற்றது. இம்மோதலில் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது

விடுதலைப்புலிகள் ஒரு வை-8 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இம் மோதல்களில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீர வேங்கை தமிழினியன் (யல்சன் எதிர்மன்னசிங்கம் ஆனந்த வேல் சுழிபுரம் வடக்கு சுழிபுரம்) என்னும் போராளிக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சிறுகாயமடைந்தோர் மற்றும் 05 தாதியரை கொண்டு செல்லும்.

### வை-8 விமானம் பற்றிய விபரங்கள்

முழு நீளம் — 111 அடி 7 அங். (34 25 மீற்றர்)
முழு உயரம் — 36 அடி 7 அங் (11 16 மீற்றர்)
செட்டையின் முழு நீளம் — 124 அடி 8 அங். (38 மீற்)
22965 அடி (7000 மீற்றர்) உயரத்தில்
அதிகூடிய வேகம் — மணித்தியாலத்திற்கு 411 மைல்.
26250 அடி (8000 மீற்றர்) உயரத்தில்
அதிகூடிய சீரான வேகம் — மணித்தியாலத்திற்கு 342மைல் (550 கிலோ மீற்றர்)
சிக்கனமான சீரான வேகம் — மணித்தியாலத்திற்கு 329 மைல் (530 கிலோ மீற்றர்
எரிபொருள் தாங்கியின் அளவு மொத்தம் — 30 177 லீற்றர்

புலிகளின் எறிகணை தாக்கி

# இரண்டு சீன டாங்கிகள் தீப்பற்றி எரிந்து நாசம்

(இயக்கச்சி)
புல்லாவெளிப் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோதலின் போது இரண்டு சீன தயாரிப்பு டாங்கிகள் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாக நாசமாயின.

நேற்றுக் காலை ஆரம்பித்து மாலை வரை இடம் பெற்ற இம் மோதலின் போது இரு சீன தயாரிப்பு டாங்கிகளான ரி-55 ரக டாங்கிகளை மிக அண்மையில் இருந்து விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான டாங்கிகள் எரிந்து நாசமாகியதாகும் இவ் டாங்கியினுள் இருந்தவர்களும் கொல்லப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடபகுதி மக்களை

## ஆனையிறவு ஊடாகவர நிர்ப்பந்திப்பதே நோக்கம்

(கொழும்பு)
யாழ். குடாவை ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் சகல பகுதிகளையும் மூடிவிட்டால் தமிழ் மக்கள் ஆனையிறவுப் பகுதியூடாகவர நிர்ப்பந்திக்கப்படுவார் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச நிலப்பரப்பினைக் குறைப்பதும் மக்களை வட பகுதியில் இருந்து ஆனையிறவுப் பகுதி வழியாக வரவழைப்பதுமே பலவேகய-2 இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என சிறிலங்கா கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தினர் முன்னேறும்போது பலத்த எதிர்ப்பை சந்திக்கவேண்டியிருந்ததாகவும் விமானப்படையினர் டாங்கிகள் உதவியுடன் 3000 படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## கோவை மகேசன் சென்னையில் காலமானார்

(சென்னை)
பிரபல பத்திரிகையாளரும் எழுத்தாளருமான திரு. கோவை மகேசன் சென்னையில் சுகவீனம் காரணமாக காலமானார்.

சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய திரு கோவை மகேசன் 1982-ம் ஆண்டிலிருந்து சென்னையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வீரவேங்கை என்னும் பத்திரிகையையும் நடத்திவந்தார்.

அன்னாரின் மறைவையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஊர்காவற்படை நபர் தற்கொலை

(கொழும்பு)
கந்தளாயில் சிறிலங்கா ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

பி.பி நாணயக்கார என்று அடையாளம் காணப்பட்டுள்ள இந்த ஊர்காவல்படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ‘ஓ’ நெகட்டிவ் இரத்தம் தேவை

O (ஓ நெகடிவ்) இன இரத்தம் மிகவும் அவசரமாகத் தேவைப்படுகிறது. தயவு செய்து இவ்வின இரத்தம் உடையவர்கள் உடனடியாக இரத்ததானம் செய்துதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் யாழ் போதனா மருத்துவமனை இரத்தவங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# அலம்பிலில் பெரும் படை குவிப்பு தாக்குதலுக்கு முஸ்தீபு

மணலாறு மாவட்டம் அலம்பிலில் இருந்து மற்றுமொரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள சிறிலங்கா அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகளுக்கென அலம்பில் பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுவருகின்றனர். மேலும் முல்லைத்தீவு மணலாறு கடற்பரப்பில் போக்குவரத்துகளையும் கடற் தொழிலையும் சிறிலங்கா கடற்படையினர் தடுத்துள்ளனர்.

கடல் வழியாகவும் பெருமளவு படையினர் அப்பகுதியில் இறக்கப்பட்டுவருகின்றனர்.

# கரும்புலிகள் தினம் உணர்வுபூர்வமாகஅனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைகளை விரட்டியடிக்கும் தாயக விடுதலைப் போராட்டத்தில் அகில உலகமுமே வியக்கும் வகையில் வீரகாவியம் படைத்த கரும்புலிகளின் நினைவாக நேற்று கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு வடதமிழீழத்தின் பல்வேறு இடங்களிலும் நினைவஞ்சலிக் கூட்டங்களும், அஞ்சலி நிகழ்ச்சிகளும் நடைபெற்றது பிரதான வீதிகளின் கேந்திர இடங்களில் வீரமரணமடைந்த எட்டு கரும்புலிகளினதும் உருவப்படங்கள் விசேடமாக அமைக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட மேடைகளில் வைக்கப்பட்டு அணையாத தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன.

இத் திருஉருவப் படங்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

பிரிவு ரீதியாக அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை சரணடையுமாறு துண்டுப்பிரசுரம் வீச்சாம்

யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளைச் சரணடையுமாறு கோரி துண்டுப் பிரசுரங்கள் விமானங்களிலிருந்து வீசப்படுவதாக கொழும்பின் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத் துண்டுப்பிரசுரங்களில் சரணடையும் புலிகள் நன்கு பராமரிக்கப்படுவதாகவும், தலைவர் பிரபாகரன் இப்போது யாழ்ப்பாண மக்களைக் கைவிட்டுச் சென்றிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளதாம். மேலும் பாதுகாப்பு படையினருக்கு முகங்கொடுக்க முடியாமல் புலிகள் தப்பியோடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

# மூன்றாம் உலக நாடுகள் தற்போது கைத்தொழில் துறையில் வளர்கிறது

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் உலக நாடுகள் தற்போது உலகளாவிய ரீதியில் கைத்தொழில் மயநாடுகளாக வளர்ச்சியடைவதுடன் ஏற்றுமதித் துறையிலும் அதன் பங்களிப்பும் போட்டி போடத் தக்கவகையில் வளர்ந்து வருகின்றதை நாம் புள்ளிவிபர ரீதியாகவும், தகவல்தொடர்பு சாதனங்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது.

இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக சிரேஷ்டபொருளியல்விரிவுரையாளர் ப சிவநாதன் 'விருட்சம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழக வணிக மன்றத் தலைவர் திரு தி. வரதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு ப. சிவநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில்.

பல்கலைக்கழகங்களில் வெளிவரும் சஞ்சிகைகளை மாணவர்கள் அதனை ஊடறுத்து வாசிப்பதன் ஊடாக உச்சப் பயனை அடையலாம் என்றார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் ஆசியுரை நிகழ்த்துகையில் இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் குறிப்பாகப் பத்திரிகைத்தாள்கள் தட்டுப்பாடான நிலையிலும் விருட்சம்போன்ற நூல்கள் வெளிவருவதை யிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன் என்றார்.

மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் பல ஆய்வுகளை நடாத்தி ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட முன்வர வேண்டுமென்றார்.

கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரை நிகழ்த்துகையில் இலங்கை முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள வணிகத் துறைகளை பீடங்களாக்க அரசு ஆலோசித்து வருகிறது என்றார்.

இவ்விழாவில் பேராசிரியர் என். பாலகிருஸ்ணன், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி முன்னாள் அதிபர் ஜெயரட்ணம் ஆகியோர் உரையாற்றினர்.

(05)

## பொருட்காட்சி

கோப்பாய் மாதர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும், தையல், மனையியல், கைப்பணிப் பொருட்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணி முதல் பிற்பகல் 5-00 மணி வரை நடைபெறவுள்ளது.

புத்தூர் குமரகுருபரன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் பொருட்காட்சிக்கு. பிரதி மாவட்ட ஆணையாளர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் கு. பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் க. கனகரெத்தினம் தலைமையில் இப் பொருட்காட்சி நடைபெறும்.

## நூல்வெளியீடு

'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை [6. 7. 92] யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் பி. ப. 3மணிக்கு இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் சிறப்புரையும், ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கலாநிதி நா. ஞானக்குமரன் பதிலுரையும் மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. சிவானந்தமூர்த்தி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் நூல் ஆய்வுரைகளையும் நிகழ்த்து...

# மண்ணில் புதையுண்டு பெண்தொழிலாளி மரணம்

(இராகலை)

வீட்டுக்குப் பூசுவதற்கு மண் வெட்டிக் கொண்டிருந்த ஒரு பெண் தொழிலாளி மண்ணுள் புதையுண்டு இறந்துள்ளார்.

மாஊவா தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா லட்சுமி என்ற சிறுமியே இவ்வாறு மரணத்தைத் தழுவிக் கொண்டவராவர்.

காலஞ்சென்ற லட்சுமி பன்னிரண்டு வயதுடைய சிறுமி வேறு இரண்டொருத்தரும் வீட்டிற்கு பூசுவதற்கு வெள்ளை மண் வெட்டச்சென்றுள்ளனர். சுமார் 25 அடி உயரமுள்ள மண்மலை தன் மேல் விழுந்து விடும் என்று சற்றும் யோசிக்காமல் அடியிலுள்ள பொந்து ஒன்றில் வெள்ளை மண்ணை தோண்டி எடுத்துக் கொண்டிருக்கையில் முழுமையாக மண் இடிந்து லட்சுமியின் மேல் வீழ்ந்து மூடியதால் மரணமானார்.

# விக்கிரமபாகு உட்பட எண்மர் பொலிசாரால் கைது

(கண்டி)

நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி கருணாரத்ன விக்கிரமபாகு, அவரின் மெய்ப்பாதுகாவலர் உட்பட எட்டுப்பேர் கண்டியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டியில் நடந்த இரைச்சல் போராட்டத்தில் கலந்து கொண்ட வேளையிலேயே இவர்கள் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை இரைச்சல் கோஷ போராட்ட அமைப்பாளரும் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பி. யுமான மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் இக் கைதுகள் தொடர்பாக முறைப்பாடு செய்திருக்கிறார்

# தபால் பொதி இறக்க விசேட அனுமதி

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் ''குமண'' என்ற கப்பலில் எடுத்துவரப்படும் தபால் ... ஏனைய பொருள்கள் ஊரடங்கு அமுலில் இருப்பதால் இறக்கமுடியாதுள்ளது. தபால் பொதிகள் இறக்கப்பட்டு ...

## வரி விளம்பரம்

### 200 நாடகங்கள்

யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழில் முதன்முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரே யொரு மாணவனான - 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்! கெட்டிக்காரர்கள் 25/- .முதலாம்பிள்ளை 30/- (2722)

### காணவில்லை

நாராந்தனை தெற்கைச் சேர்ந்த மங்களம் என அழைக்கப்படும் தாவீது சில்வெஸ்ரர் என்பவரைக் காணவில்லை. (வயது 31) இவரது இடது பக்க முழங்கையில் காயம் ஏற்பட்ட தழும்பு உண்டு. பொது நிறம். கடைசியாக நீலநிற சேட்டும், வெள்ளைச் சாரமும் அணிந்திருந்தார். இவர் அரியாலை கிழக்கு நாவலடி அகதி முகாமில் வசித்து வந்தவர். இவரைக் கண்டவர்கள் இம்முகாமில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:- மனைவி இ. வசந்தி

(2768)

## ஒத்திவைப்பு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான ஆட்சேபனை மனு விசாரணை 527 நாட்கள் நீடித்து நடைபெற்ற பின்னர் இந்த விசாரணை தொடர்பான தீர்ப்பு வழங்குவதை உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது. இவ்வழக்கில் மனுதாரர் சார்பிலும் இரு பிரதிவாதிகள் சார்பிலும் 977 சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

# இந்திய ஜனாதிபதித் தேர்தலில் சர்மா வெற்றி நிச்சயம்

## - இந்திய ஆய்வாளர்கள் கருத்து

[டில்லி]

இந்தியாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்திய ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரான சங்கர் தயாள் சர்மா வெற்றி பெறுவது உறுதியாகி விட்டதாக இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சர்மாவிற்கு ஆதரவு தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த வெற்றி வாய்ப்பு மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எம். பி மார், எம். எல். ஏக்கள் மூலமாகக் கிடைக்கக் கூடிய மொத்த வாக்குகள் 10 67 இலட்சமாகும். இதில் சர்மா 6 02 இலட்சம் வாக்குகளைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் காங்கிரஸ் கட்சிக்குள்ள 4 24 இலட்சம் வாக்குகளுடன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஆதரவான கட்சிகள் மூலம் பெறக்கூடிய வாக்குகளையும் சேர்த்து 6 02 இலட்சம் வாக்குகளை அவர் பெறமுடியும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் பேராசிரியர் ஜி ஜி சுவெல் 3.73 இலட்சம் வாக்குகளை மட்டுமே பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது இது பாரதீய ஜனதாக கட்சிக்குள்ள 2 25 இலட்சம் வாக்குகளையும் தேசிய முன்னணியின் 1 41 இலட்சம் வாக்குகளையும் அதன் ஆதரவு கட்சிகளின் வாக்குகளையும் கூட்டி வருவதாகவும்.

சர்மாவிற்கும் பேராசிரியர் ஜி. ஜி சுவெலுக்கும்இடையே இத் தேர்தலில் நேரடிப் போட்டி ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில், இரு தரப்பினரும் தமக்கு ஆதரவாளர்களை அணிதிரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

அதே வேளையில் ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த பத்து எம். பிக்கள் காங்கிரஸ் வேட்பாளரான சர்மாவுக்கு ஆதரவு தர முன் வந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஜனதாதள்கட்சியைச் சேர்ந்த இரண்டுபேர்கள் சர்மாவின் பெயர் பிரேரிக்கப்பட்டபோது அதனை வழிமொழிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தேசிய முன்னணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளது எதிர்க்கட்சி வேட்பாளரான ஜி ஜி சுவெல்லை மிகவும் பாதிப்பதாகவே உள்ளது

தேசிய முன்னணியுடனான கம்யூனிஸ்ட் கட்சியின்உறவை இது பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதே வேளை தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான வி.பி சிங் இதற்கு மாறான கருத்தொன்றையே தெரிவித்திருக்கின்றார். இருகட்சிகளுக்கும் இடையேயான உறவை இந்தமுடிவு எந்த விதத்திலும் பாதிக்காது எனவும். இருகட்சிகளுக்குமிடையேயான உறவுகள் வழமைபோல தொடர்ந்தும் பேணப்படும் எனவும் வி. பி. சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.


## கண்ணீர் அஞ்சலி

ஓ! இந்து மைந்தனே!
பேசிய தென்றல் - இன்று
அமைதியாய் போனதனால்
துடிதுடித்த உன் துப்பாக்கி
தேம்பி அழுகிறது!
ஆனாலும் . . . . .
உன் வரலாறு - இன்று
மீட்கப்பட்ட போது
உன்னுடைய கனவுகளை
-கவிதையாய்
எம் கண்கள்
சுமந்து நிற்கிறது!

கட்டைக்காட்டில் வீரச்சாவடைந்த வீரவேங்கை மணிமாறனுக்கும் (சர்மா) ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீரஞ்சலிகள்

யாழ் இந்து மகளிர் கல்லூரி
மாணவிகள்

[2766]

## யாழ்ப்பாண மாநகரசபை

### சித்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கான (பதிற்கடமை)

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையில் பணியாற்றும் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் விடுமுறையில் செல்லும் காலங்களில் சேவை தடைப்படாமல் இயங்குவதற்கு வசதியாக பதிற்கடமை புரிவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. சித்த ஆயுர்வேத தராதரத்தை உடையவர்களாகவும், வைத்தியராகப் பணிபுரியப் பதிவுசெய்யப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

## நினைவு கூருகின்றோம . .

## 1992-07-06

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் மந்திகையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப். தியாகு** (பு. சித்திரவேல் - கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

மகான் (சின்னத்தம்பி பஞ்சலிங்கம் - உடுத்துறை, ...

யுரையும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கலாநிதி நா. ஞானக்குமரன் பதிலுரையும் மெய்யியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. சிவானந்த மூர்த்தி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் நூல் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை கல்வி இயற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகமும், நன்றியுரையை வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன் அவர்களும் ஆற்றவுள்ளனர். மெய்யியல் ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. (05) (25)

## அதிபர்களுக்கான படி அதிகரிப்பு

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கு வழங்கும் படியை அரசு அதிகரித்துள்ளது.

தேசிய பாடசாலை அதிபர்களுக்கு படியாக வழங்கப்பட்டு வந்த 250 ரூபா 375 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மகாவித்தியாலய அதிபர்களுக்கு 200 ரூபா 300 ரூபாவாகவும் தரம்-இரண்டு பாடசாலை அதிபர்களுக்கு 150 ரூபா 250 ரூபாவாகவும், ஆரம்பப் பாடசாலை அதிபர்களுக்கு படி 100 ரூபாவிலிருந்து 150 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

[யாழ்ப்பாணம்]

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவராக கு. சிவானந்தன் செயலாளராக சி. சண்முகராசா, பொருளாளராக இ. பாலசுந்தரம் உபதலைவராக சி. சுந்தரலிங்கம், உப செயலாளராக செல்வி அ. முத்துசாமி ஆகியோரும் உறுப்பினர்களாக ஐ. கோபாலகிருஷ்ணபிரசாத், சி. முத்துக்குமாரு, அ. முத்துலிங்கம் க. பூரணச்சந்திரன் சி. மார்க்கண்டு. க. மனோகரரூபன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## தபால் பொதி இறக்க விசேட அனுமதி

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் "குமண" என்ற கப்பலில் எடுத்துவரப்படும் தபால் பொதிகளை இறக்குவதற்கு விசேட அனுமதி பெறப்பட்டிருக்கிறது கப்பலில் உள்ள ஏனைய பொருள்கள் ஊரடங்கு அமுலில் இருப்பதால் இறக்கமுடியாதுள்ளது. தபால் பொதிகள் இறக்கப்பட்டு நாளை மறுதினம் விநியோகிக்கப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது.

## சட்டி பானைகளை தட்டி பலன் ஏதும் இல்லை

### -பிரேமதாசா

(கொழும்பு)

சட்டி பானைகளைத்தட்டிக் கூச்சலிடுவதால் எவ்வித பயனும் இல்லை எதிரணியினர் சிறந்த திட்டங்களை முன்வைத்தால் நாம் அதனைப் பரிசீலிப்போம் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வெல்வத்தையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் அரசின் திட்டங்கள் சிறந்தவையல்ல வெனின் பொருத்தமான சிறந்த திட்டங்களை எதிரணியினர் முன்வைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## வழக்கறிஞர் இருவரை கறுப்பு உடையினர் மிரட்டல்

(கொழும்பு)

அனைத்துலக மனித உரிமைகள் சங்கம் கொழும்பில் இரு சட்டத்தரணிகள் இனந்தெரியாதோரால் மிரட்டப்படுவது குறித்து தகவல் வெளியிட்டுள்ளது

இவ்விருவரும் மனித உரிமைக்கும் வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அரசியல் காரணங்களுக்காக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்காக இவ்வமைப்பின் உறுப்பினர்கள் வாதாடுகின்றனர்.

கடந்த மாதம் ஒரு நாள் நள்ளிரவில் கறுப்பு உடையணிந்த சிலர் இந்த இருவரினதும் அலுவலகங்களுக்குச் சென்று அங்கிருந்தவர்களை மிரட்டி உள்ளனர்.

இவர்கள் குறித்து பொலிசில் புகார் செய்யப்பட்ட போதும் இனந்தெரியாதோர் அப்பகுதிக்கு வந்து வழக்கறிஞர்களை மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை வங்கி

## வடபிரதேச காரியாலயம் வவுனியாவுக்கு இடமாற்றம்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை வங்கியின் வட பிரதேசக் காரியாலயத்தை வவுனியாவுக்கு இடமாற்றம் செய்ய இலங்கை வங்கியின் கொழும்பு தலைமைக் காரியாலயம்முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயம், வடபிரதேசக் காரியாலயத்தை உடன் வவுனியாவுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆயுர்வேத வைத்தியர்கள் விடுமுறையில் செல்லும் காலங்களில் சேவை தடைப்படாமல் இயங்குவதற்கு வசதியாக பதிற்கடமை புரிவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**


1. சித்த ஆயுர்வேத தராதரத்தை உடையவர்களாகவும், வைத்தியராகப் பணிபுரியப் பதிவுசெய்யப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 21 தொடக்கம் 45 வரை
3. மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும் தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 11-07-92 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 00 மணிக்கு நல்லூரிலுள்ள மாநகரசபை அலுவலகத்திற்குச் சமூகமளிக்கவும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 03-07-1992 (சி/4658)

## வீர அஞ்சலி

| வீரஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 05 | | 28 |
| — | | — |
| 64 | | 06 |
| — | | — |
| 1970 | | 1992 |



### கப்டன் வீரமணி

(கணேசபிள்ளை சந்திரசேகரம்)
கண்ணகிபுரம், உவர்மலை, திருமலை.

சின்னப்பூவிழி நெருப்பைச் சுமந்ததும்
செருக்களத்தினில் பகை முடித்ததும்
விண்துகள்பட நீ நிமிர்ந்ததும்
வீரமணியெனப் பெயர் எடுத்ததும்
மண்விடுதலை என்று திரிந்ததும்
மலைசரிந்தது போல விழுந்ததும்
கண்பட்டது போல முடிந்ததா?
காலமினியொரு கவிதை வழங்குமா?

- நண்பர்கள்.

(2765)

## 1992-07-06

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப். தியாகு** (பு. சித்திரவேல் - கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

**மகான்** (சின்னத்தம்பி பஞ்சலிங்கம் - உடுத்துறை, தாழையடி)

அம்பாறை - செம்மணிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட -

**காளி** (ஞானசேகரம் சின்னத்தம்பி - பழுகாமம் - 1, மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கிளிநொச்சி - பரந்தனைச் சேர்ந்த தமிழ்ப்பொது மகன்.

1990 ஆம் ஆண்டு பலாலியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பிரதீபன்/ உமா** (சுப்பையா சந்திரன் - இருபாலை கோப்பாய்)

அம்பாறை - சஞ்சிகுடியாற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

கிண்ணியாப்பகுதியில், முஸ்லிம் ஊர்காவல் படையினரால் உயிருடன் ரயர்போட்டு எரிக்கப்பட்ட 6 - தமிழர்கள்.

திருக்கோணமலை - மூதூர்ப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 - தமிழர்கள்.

தமிழீழக்கடற்பரப்பில் (தலைமன்னார்) பயணம் செய்து கொண்டிருக்கையில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது, படகுடன் மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை சேருவிலப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் துறைமுகம் பகுதியில், பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளின் போது சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில், சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன சின்னத்தம்பனையைச் சேர்ந்த தமிழ்இளைஞன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4652)

## சிந்தனைக்கு

ஒரு கல்லின் மீது இருமுறை இடறுவது அவமானம்.
-இரேக்கப்பழமொழி.

ஈழநாதம்

61, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 06-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 95

## இராணுவச் சிப்பாய்களே உண்மையை உணர்வர்

ஒப்பரேசன் பலவேகய II ஆரம்பமாகி ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. 24மணி நேரத்திற்குள் வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு முகாமைச் சென்றடையவேண்டிய இராணுவத்தின் போர்முனைத் திட்டமானது, ஒருவாரத்தின் பின்னரும் இலக்கை எட்ட முடியாத அளவிற்கு புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலினால் பெரிதும் தடைப்பட்டுப்போயுள்ளது. அத்தோடு, இராணுவத்தினருக்கு பெரும் உயிர் இழப்பும், தளபாட சேதங்களும் ஏற்பட்டன. இதன் காரணமாக இருமுனைகளில் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட இப்போர் தற்பொழுது மூன்றாவதும், புதியதுமான ஓர் போர் முனையையும் திறக்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், சிறிலங்கா இராணுவத் தரப்பினர் யுத்தமுனை செய்திகள் என்ற ரீதியில் பெரும் புளுகுகளைக் கட்டவிழ்த்து விட்ட வண்ணமுள்ளனர். வழமையாக யுத்தமுனையில் புலிகளுக்கு ஏற்படும் இழப்புக்களை மிகைப்படுத்தியும் இராணுவ தரப்பில் ஏற்படும் இழப்புக்களை மிகவும் குறைத்துக் கூறுவது வழமையான நடவடிக்கையே ஆகும். இந்த வகையில் ஒப்பரேசன் பலவேகய II பற்றி வெளியிடும் செய்திகள் பிரமிப்பும், அதிர்ச்சியும் ஊட்டுபவையாகவுள்ளன.

கடந்த ஒரு வாரகாலமாக ஆனையிறவில் இடம்பெற்று வரும் மோதலில் 500 புலிகள் கொல்லப்பட்டதாகவும் பெரும் எண்ணிக்கையில் புலிகள் காயமடைந்துள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலில் மட்டும் 200புலிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் யுத்தமுனையில் இருந்து துவிச்சக்கரவண்டிகளிலும், மினிபஸ்களிலும் தப்பி ஓடும் புலிகள் மக்களுக்குள் பதுங்கிக் கொள்வதாகவும் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தரப்பு சொல்வது உண்மையானால், இராணுவத்தை எதிர்த்துப் போராடுவ...

# தமிழர் தேசம் தலைநிமிர தம்முயிர் தரும் கரும்புலிகள்

ஐந்து வருடங்கள் அதற்குள் பறந்தோடி விட்டன. 1987ஆம் ஆண்டின் இந்த நாட்கள் இன்னமும் அநேகரின் நினைவுத் திரையில் பளிச்சிடும். வடமராட்சிப் பகுதிக்குள் மீண்டும் செல்ல முடியுமா? அங்கே சென்று எமது வாழ்வைத் தொடர முடியுமா..? என்று மக்கள் பரவலாக அச்சத்தோடு அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளை வல்லை வெளியை ஊடறுத்தும், முள்ளிப் பகுதியில தரித்திருந்தும் சிறிலங்கா இராணுவம் வடமராட்சி மண் முழுவதையும் ஏப்பம் விட்டு விட்டதாக எக்காளம் இட்டுக் கொண்டிருந்த அந்தக் கருணத்தில் தான் திடீரென நெல்லியடி அதிர்ந்தது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபங்களில முழங்கிய வெடியோசையின் சிங்களப் படைகளுக்கு சமாதி கட்டிவிட அரசியல் அரங்கு எங்கும் அதிர்ச்சியின் அதிர்வுகள் பரவின. கரும்புலிகளின் மகோ திடமும். இலட்சிய வேட்கையும் உலகின் முன் தமிழ் மக்களைத் தலைநிமிர வைத்தது. இத்தகைய அர்ப்பணிப்பு மிகுந்த சாதனைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கொழும்பு அரசாங்கம் புதுடில்லியின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக சரணாகதி அடைந்தது.

ஆம்! 1987 ஜுலை 5ஆம் நாள்! தனது சாவுக்கு நேரம் திகதி, இடம் எல்லாம் குறித்தபடி-தன் உயிரைக் கொடுத்து தமிழினத்தின் இருப்பைக் காக்க — மில்லர் என்றொரு வீரப் புலிமகன் முன்வந்தான். வல்லிபுரம் வசந்தன் என்ற இயற்பெயரோடு துன்னாலை மண்ணில் தவழ்ந்து திரிந்த அந்த மைந்தன் தமிழீழப் போராட்ட வரலாற்றில் கரும்புலி மில்லர் என்று பெயர் பொறித்துக்கொண்டான்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தை சிதறடிச் செய்யவும், சிங்கள அரசுத் தலைமையின் சித்தத்தைக்

என நாங்கள் மகிழ்வோடு செல்வோம். கண்டதும் சிங்களம் கலங்கிடும் வெல்வோம்' என ஆர்த்தெழுந்து பாடியபடி முன்னேறிச் செல்லும் இவர்கள், ''அம்மாவும் அப்பாவும் எங்களுக்குண்டு'' என உணரத்தவறாத அதேவேளை

மாட்டோம்'' என்பதற்கு இலக்கணமாகி கடலின் அலைகளிலும், காற்று வெளிகளிலும் கலந்து விட்ட இந்த மாவீரர்களுக்காக தலைசாய்க்க தேசம் கடமைப்பட்டு நிற்கிறது.

வன்னி மாவட்டத்தின் மை

பணிப்பு தியாகத்திற்கு இலக்கணம் ஆகும் என்றால் மிகையானதல்ல. எதிர்கால தலைமுறைக்கும், இன்றைய தலைமுறைக்கும்கூட இவனது வீரம் ஒரு எடுத்துக்காட்டு.

மன்னார் மாவட்டத்தில் சிலாபத்துறை பிரதேசத்தில்

பெறுகிறது. இந்த மண்மகிமை அடைகின்றது.

தமிழீழக் கடற்பரப்பில் வெடிமருந்துகளை நிரப்பியபடி எதிர் இலக்குகளைத் தேடி படகுகளில புறப்பட்டுச் சென்ற கப்டன் சிதம்பரம், (பெரியதம்பி சந்திரன், வல்வெட்டித்துறை) கப்டன் ஜெயந்தன் (கருப்புக்குட்டி பதுமநாதன், மட்டக்களப்பு) கடற்படையினருக்கு சவால் விட்டனர்.

தமிழீழக் கடற்பரப்பில் ரோந்து சுற்றும் பீரங்கிப் படகுகளும், டோராப் படகுகளும் கப்பல்களும் தமிழீழ மக்களின் எண்ணத்தையும். வேட்கையையும் அழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த வேளையில் அதனை முறியடிக்கும் ஆவலோடு நீறாகிப்போன இவர்களின் வரலாறு வாழும்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டம் இன்று தென்னாசிய அரங்கில் மட்டுமன்றி உலக அரங்கிலும் முன்னிலைக்கு வந்து முதன்மை பெற்று நிற்கின்றது என்றால் அதற்கு மூலகாரணம், அதனை வழிநடத்தும் தலைமையும், தலைமையின் வழிகாட்டலின் கீழ் அர்ப்பணிப்போடும், துணிவோடும் செயற்படும் வீரர்களும்தான். புலிவீரர் ஒவ்வொருவரும் நஞ்சினைக் கழுத்திலே மாலை



தலைவர் பிரபாகரனுடன் 'கரும்புலி' வீரர்கள் கப்டன் சிதம்பரமும், கப்டன் ஜெயந்தனும்

யில் ''ஆனாலும் மண் மீதில் பெரும்பாசம் உண்டு'' என்பதைசெயலில்நிரூபிக்கத்தயங்கியதில்லை. இதனால் தான் இந்தத்தேசம் இவர்களுக்காக நன்றிக்கடன்பட்டு நிற்கின்றது

தரையில் மட்டுமன்றி தமிழீழக் கடலிலும் எதிரிக்கு சமாதி கட்ட முன்வந்த கடற்கரும்புலிகள் வரிசையில் கப்டன் கொலின்ஸ், (பரீணந்து சில்வெஸ்ரர், மன்னார்) கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை தியாகராசா, வல்வெட்டித்துறை) மேஜர் காந்தரூபன் (யோகராசா கோணேஸ்வரன், வல்வெட்டித்துறை) ஆகியோர் முதலி

வப்பகுதியான மாங்குளத்தில் நான்கு புறமும் காடுகள் சூழ நன்கு அரண் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாமைத் தகர்த்தெறிய விடு

**தமிழீழ இலட்சிய வேட்கையில் தம்முயிர் தந்த கரும்புலிகளின் நினைவு நாள் நேற்று ஆகும். இதனைக் குறிக்கும் முகமாக இவ் ஆக்கம் இங்கு பிரசுர**

சிறிலங்காப் படைகளின் முகாம். முத்துக்கள் விளையும் மன்னார்க் கடலின் அருகே இருக்கும் இந்தமுகாம் மீதான தாக்குதல் தமிழீழ வரலாற்றில் முதலாவது பெரும் போர் எனக் குறிப்பிடலாம். சிறிலங்காவின் முப்படைகளையும் எதிர்த்து தமிழீழத்தின் வீரப் புலி மறவர்கள் நடத்திய தீரம் மிகும் போர் இது. வடக்கே தள்ளாடி, வங்காலை இராணுவ முகாம்களிலிருந்தும் தெற்கே கொண்டச்சி முகாமிலிருந்தும் மேற்கே கடலிலிருந்தும், வான்மார்க்கமாகவும் தாக்குதல் நடத்திய படையினரைச்



கரும்புலி கப்டன் மில்லர்

வாய் அணிந்தவர்தான் என்றாலும் அவர்களிலுள்ளும் சாவைச் சந்திக்கும் இடசித்த தோடும், எதிரியை முறியடிக்

தாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் யுத்தமுனையில் இருந்து துவிச்சக்கரவண்டிகளிலும், மினிபஸ்களிலும் தப்பி ஓடும் புலிகள் மக்களுக்குள் பதுங்கிக் கொள்வதாகவும் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தரப்பு சொல்வது உண்மையானால், இராணுவத்தை எதிர்த்துப் போராடுவது யார்? முன்னேறுவதைத் தடுத்து இராணுவத்திற்குப் பாரிய இழப்புக்களை ஏற்படுத்துவது யார்? இராணுவம் தரித்து நிற்பது ஏன்? ஓடும் புலிகளை விரட்டிச் சென்று பிடிக்காதது ஏன்? உலகில் எவரும் சிந்திப்பதில்லை என சிங்கள அரசு கருதுகின்றதோ.

ஆனால் சிறிலங்கா இராணுவத்தரப்பினரின் இக்கூற்றை இலங்கையிலோ, அன்றி உலகின் வேறெந்தப் பகுதியிலோ இருக்கும் சற்றுச் சிந்திக்கத் தெரிந்த எவரும் நம்பமாட்டார்கள். "புலிகள் நேரடி மோதலில் ஈடுபடக் கூடிய நிலையில் இல்லை" எனக் கூறும் இராணுவம் பின்னர் படையினர் "பல மணிநேரம் புலிகளுடன் நேரடி மோதலில் ஈடுபட்டனர்" என முன்னுக்குப் பின் முரணாக செய்தி வெளியிடுகின்றனர் என பி.பி.ஸி செய்தியாளரே கேள்வி எழுப்புகிறார்.

இதேபோன்றே, ஒப்பரேசன் பலவேகய I இன் போது, வெற்றிலைக்கேணியில் இருந்து இராணுவம் முன்னேறுகிறது - முன்னேறுகிறது என சிறிலங்கா இராணுவத் தரப்பு வெளியிட்ட செய்தியை கேட்டு வந்த ஒரு பிரிட்டிஷ்காரர் "இவ்வளவு நேரத்திற்குள் பிரிட்டன் வந்து சேர்ந்திருக்கலாம்" என்றார். இவற்றிலிருந்தே சிறிலங்காவின் செய்திகள் குறித்து உலகம் கொண்டுள்ள கணிப்பீட்டைத் தெரிந்து கொள்ளலாம்.

இதேவேளை, சிறிலங்கா அரசாங்கம் எதைத் தெரிவிப்பினும் தமிழ் மக்கள் அதை நேரடியாக ஊர்ஜிதம் செய்யாமல் அதை நம்பிவிட மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் சிறிலங்காவினதும், ஏன் இந்தியாவினதும் பல அறிவிப்புக்களையும் புரட்டுக்களையும் சந்தித்தவர்கள்.

இந் நிலையில் உலகமும், தமிழரும், சிறிது சிந்திக்கத் தெரிந்த சிங்களவர் கூட நம்பமுடியாத இப் பொய்ப்பிரசாரத்தை சிறிலங்கா இராணுவமும் அரச தரப்பும் யாருக்காகச் செய்கின்றது. அப்பாவிச் சிங்கள மக்களை ஏமாற்றச் செய்கிறது இதேவேளை புலிகள் தோற்கடிக்கப்பட்டால், தமிழர்களின் தலைவர்களாகலாம் என்ற எண்ணத்தில், கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் மனத்திருப்தி அடையலாம். சிலவேளைகள் நிலவரம் புரியாமல் சிறிலங்கா அரசாங்கம் கூட வெற்றி குறித்து நம்பிக்கை கொள்ளலாம். ஆனால் இப் பொய்ப்பிரசாரம் ஒன்றினாலும் வெற்றியே நோக்கமாகக் கொண்டுள்ள இராணுவம் திருப்தி அடைய முடியாது ஏனெனில் போர்கள நிலவரத்தையும், புலிகளின் மனோதிடத்தையும் களத்தில் சந்திக்கும் இராணுவத்தினர் நிலைமை உணராமல் இருக்க வாய்ப்பில்லை.

பொறித்துக்கொண்டான்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தை சிதறிடச் செய்யவும், சிங்கள அரசுத் தலைமையின் சித்தத்தைக் கலங்கச் செய்யவும் கப்டன் கரும்புலி மில்லர் நடத்திய தாக்குதல் பயன்பட்டது வெடி மருந்துகள் நிரப்பிய லொறியை ஓட்டிச்சென்று கப்டன் மில்லர் வெடிக்க வைத்தபோது அதிர்ந்தது நெல்லியடி மட்டுமல்ல கொழும்பும் - புதுடில்லியும் கூடத்தான்.

இவன் ஆரம்பித்து வைத்த இந்த யாகவேள்வியில் இது வரையில் கரும்புலிகளாக ஏழு பேர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். "கரும்புலிகள் சில்வெஸ்ரர், மன்னார்) கபடன் விநோத் (வேலுப்பிள்ளை தியாகராசா, வல்வெட்டித்துறை) மேஜர் காந்தருபன் (யோகராசா கோணேஸ்வரன், வல்வெட்டித்துறை) ஆகியோர் முதலிடத்தைப் பிடித்து நிற்கின்றனர் கடல் அலைகளின் மீது தவழ்ந்து திரிந்தபடி தமிழ் மக்களின் வாழ்விடங்கள் நோக்கி குண்டுகளை வீசலாம் என்ற எதிரியின் எண்ணத்தைப் பொடிப்பொடியாக்க இந்த வீரப் புலிகள் தங்கள் உயிர் தந்து நின்றனர்.

இந்த மண்ணுக்காக... இந்த் தேசத்தின் நலனுக்காக... எதிர்கால தலைமுறையின் நலவாழ்வுக்காக போராட்டம் நடத்தினாலும் கூட "ஆறடி மண் கூட எமக்காக வேண்ட

கரும்புலிகளின் நினைவு நாள் நேற்று ஆகும். இதனைக் குறிக்கும் முகமாக இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

தலைப் புலிகள் நடத்திய தாக்குதல் கண்டு வியக்காதவர்களே இல்லை எனலாம். சிறிலங்கா இராணுவம் திசை கெட்டுச் சிதறி ஓட நடத்தப்பட்ட இத்தாக்குதலில் கரும்புலியாகச் செயற்பட்டு முகாமைத் தகர்த்த கரு புலிலெப். கேணல் போர்க் (மா. அரசரெத்தினம்,சேமமடு வவுனியா) இன் தீரம் மிகுந்த அர்ப்

போர் இது வட்டக்கச்சி தனளாடி, வங்காலை இராணுவ முகாம்களிலிருந்தும் தெற்கே கொண்டச்சி முகாமிலிருந்தும் மேற்கே கடலிலிருந்தும், வான்மார்க்கமாகவும் தாக்குதல் நடத்திய படையினரைச் சமாளித்து சிலாபத்துறை முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். நான்கு நாட்கள் வரை நடந்த இத்தாக்குதலில் மேஜர் டாம்போ [காசிப்பிள்ளை தயாபரன் - முழங்காவில்,மன்னார்) கரும்புலியாக செயற்பட்டார். வரலாற்றுச் சக்கரத்தை முன்னோக்கி இழுத்துச் செல்ல தங்களுயிர் தந்த வீரவேங்கைகளின் வரிசையில் கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். இவர்களாலே தேசம் பெருமை

மில்லர்

யாய் அமைந்தவர்தான் என்றாலும் அவர்களிலுள்ளும் சாவைச் சந்திக்கும் திடசித்தத்தோடும், எதிரியை முறியடிக்கும் உத்வேகத்தோடும் செயற்படும் கரும்புலி வீரர்களின் தியாகம் தமிழீழ மக்களின் மனதில் நிறைய வேண்டிய தொன்றாகும்.

எதிர்காலத் தலைமுறையின்

கவிதாசன்

சுபீட்சமான நல்வாழ்வுக்கு அத்திவாரமாகப் போன இவர்களின் வீரமும், விவேகமும் என்றென்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

# பிரதமர் ராவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நோட்டீஸ்

[டில்லி]

பாரதீய ஜனதாக் கட்சியும் ஜனதா தளமும் நரசிம்மராவ் அரசிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாக தனித்தனியாக அறிவித்துள்ளன

இது குறித்து இந்த இரு கட்சிகளும் தனித்தனியாக நோட்டீஸ்கள் கொடுத்துள்ளன

இவை வரவிருக்கும் பாராளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடரில் கொண்டு வரப்படும் என்றும்,

பாரதீய ஜனதாக்கட்சிசார்பில் ஒருவரின் தீர்மானத்தை எதிர்கட்சித்தலைவர் எல்.கே. அத்வானி உட்பட ஐந்து கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்ததாகவும்.

ஜனதாதள் தீர்மானம் கட்சித்தலைவர்கள ராம் விலாஸ் பாஸ்வன், சிறிகந்த்சேனா ஆகியோரால் கொண்டுவரப்பட்டதாகவும்

தேசிய முன்னணியின் மற்றைய உறுப்புக்கட்சிகள் மற்றும் இடது சாரிக்கட்சிகளின் சார்பிலான நோட்டீசுகள் இனித் தொடரும் என்றும் தெரிவிக்கபடுகிறது.

இதேநேரம் பாரதீய ஜனதாக்கட்சி தேசிய முன்னணி இடதுசாரிக்கூட்டணி பரஸ்பரம் ஒருவர் மற்றவரது தீர்மானத்திற்கு ஆதரவு தருவார்களா என்பது குறித்து இது வரை தெரிவிக்கப்படவில்லை.

## சீனத் தூதுவரகம் மீது டாக்காவில்மக்கள் தாக்குதல்

(டாக்கா)

பங்களாதேஷ் தலை நகர் டாக்காவில் சீனத்தூதரகத்தை சுமார் 2000 பேர் கொண்ட கும்பல் ஒன்று தாக்கியது. இத்தாக்குதலினால் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

சீனத்தூதரக வளாகத்தின் உள் மனித மண்டை ஓடுகள் காணப்பட்டதாகப் புரளி ஒன்று கிளப்பி விடப்பட்டதை அடுத்து இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இரண்டு பெரிய இரும்புத் கதவுகளை உடைத்துத்திறந்து உள்ளே நுழைந்த மக்கள கட்டடத்துக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தினர். சீனப் பிரஜை ஒருவரும் தாக்கப்பட்டார். தூதரகப் பணியாளர்கள் தங்கியிருந்த விடுதியும் தாக்கப்பட்டது.

அந்தத் தூதரகத்தில் பணிபுரிந்த உள்ளூர் சிறுவன் ஒருவனை இரண்டு வாரமாக வெளியில் காணவில்லை என்ற வதந்தியும் பரவ பக்கத்துக் கிராமத்திலிருந்து அங்கு வந்து கூடிய மக்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டனர்.

பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். 19 பேர் கைது செய்யப்பட்டனர்.பொலிஸ் குண்டாந்தடி அடிப் பிரயோகத்தால் பலர் காயமடைந்தனர்.

பங்களாதேஷ் அரசு இது குறித்து உடன் வருத்தம் தெரிவித்துள்ளது.

# இந்திய- சீன எல்லைப்புற வர்த்தகம் மீண்டும் ஆரம்பம்

(டில்லி)

இந்தியா, சீனாவுடனான எல்லைப்புற வர்த்தகத் தொடர்புகளை இம்மாதம் 15ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது

சென்ற வருடம் நிறைவேறிய ஒப்பந்தப் பிரகாரம் சீனாவுடன் தரை மார்க்கமான வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிக்கிறது. முப்பது வருடங்களுக்குப் பிறகு இத்தொடர்பு மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய- சீன வர்த்தகம் பண்டமாற்று இலகுவாக பரிமாறக் கூடிய நாணய விதிகளைக் கொண்டதாக அமையுமெனவும்,

ஐந்துநாள் மலையேறி ஹிமாலய பூலான் கடவை வழியாக இவ்வர்த்தகம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வர்த்தகத்தில் திபேத்தியர்களே முன்னர் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளார்க்கை பதவி விலக தேசியகாங்கிரஸ் கோரிக்கை

[ஜொகனஸ் பேர்க்]

தென் ஆபிரிக்க பொலிசாரைக் கட்டுப்படுத்தவும் நகர்ப்புற வன்முறைகளைத் தடுக்கவும் முடியாத நிலையிலிருக்கும் ஜனாதிபதி டி கிளார்க் உடனடியாக ராஜினாமாச் செய்ய வேண்டுமென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது

இக்கட்சியின் செயலாளர் சிரில் ரமபோஸா ஜொகனஸ்பேர்க்கில் இதனைத் தெரிவித்தார்.

படையினரைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும் கிளார்க் தாம் தகுதியற்றவர் என்பதை நிரூபித்துள்ளார் என்றும் வெள்ளையர் தலைமையிலான பொலிசாரைக் கட்டுப்படுத்த தன்னால் இயலாதிருப்பதாககடந்தமாதம் ஜனாதிபதி கிளார்க் ஏ என் சி. தலைவர் நெல்சன் மண்டேலாவிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஈழநாதம்

## இந்திய வழக்கறிஞர் வருகை அனுமதி மறுப்பு சரியான முடிவு

### - பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நாடு கடத்தல் சட்டம் தொடர்பாக இந்திய வழக்கறிஞர் ஒருவருடன் கலந்துரையாட இலங்கை மறுத்தமைக்கான காரணம் பற்றியும் அதற்கான முடிவு சரியாக எடுக்கப்பட்டுள்ளதென்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்திய உயர்ஸ்தானிகர் திரு ஜாவிடம் தெரிவித்துள்ளதென்று சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் நேற்று தெரிவித்தார். ராஜீவ்காந்தி கொலை வழக்குப் பற்றி விசாரணை செய்துவரும் விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சட்ட அதிகாரி ஒருவரை இலங்கையில் நாடு கடத்தல் சட்டம்பற்றி இலங்கை சட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு இந்தியா கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கையின் நாடு கடத்தல் சட்டம் தெளிவானது. நாடு கடத்துவதற்கான சம்பிரதாய கோரிக்கை விடுக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக விதிமுறைகள் தொடர்ந்து கையாளப்படுமென்று திரு. பிரட்மன் வீரக்கோன் விளக்கினார்.

சம்பிரதாய பூர்வமான கோரிக்கை விடுக்கப்பட்டதும் சட்ட நடவடிக்கைகளை அது வழிவகுக்கும். முதலில் வெளிவிவகார அமைச்சர் சாட்சியங்களை அனுமானித்து நாடு கடத்தல் கோரிக்கை நீதிமன்றத்தின் முன் வைப்பதா இல்லையா எனத் தீர்மானிக்க வேண்டும் இரண்டாவதாக இந்தக் கோரிக்கையைப் பெறும் நீதிமன்றம் அதன் முன்னால் வைக்கப்படும் சாட்சியங்களைக் கணக்கிலெடுத்து சம்பந்தப்பட்ட நபரை நாடு கடத்துவதா இல்லையா எனத் தீர்மானிக்க வேண்டும் என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இந்தியாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதற்கான மூன்று காரணங்களை திருவாளர்கள் ரணில் விக்கிரமசிங்காவும், பிரட்மன் வீரக்கோனும் முன்வைத்தனர். சட்டக் கலந்துரையாடல் வழமைக்கு மாறானது. இவ்வாறான கலந்துரையாடல் சட்ட அதிகாரிகளிடையே தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் இந்தியா அனுப்ப விரும்பிய நபர் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரி ஆகிய காரணங்களை முன்வைத்தது.

## சுதந்திரக்கட்சி நிர்வாகிகள் தெரிவு பின்போடப்பட்டது

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி நடைபெற இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் மீண்டும் கால வரையறையின்றி பின்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலைவர் பதவி தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவிகளுக்கும் போட்டியிட பலர் முன்வந்திருப்பதால் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவே இரண்டாவது தடவையாகவும் இக்கூட்டம் பின்போடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் சந்திரிக்கா குமாரதுங்கவை நிர்வாகத் தெரிவுக்குழுவில் சிறிமாவோ பண்டாரநாயக்கா சேர்த்துள்ளார்.

## 'கம் உதாவ' கண் காட்சி ஒரு சர்வஜன வாக்கெடுப்பு

### -பிரேமதாசா

(கொழும்பு)

''கம் உதாவ கண்காட்சி நடத்துவத மூலம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பையே நாம் நடத்துகிறோம் எனக் கூறலாம். இங்கு வரும் மக்களின் கருத்துக்களை நாம் கேட்டறிகிறோம். அவர்களின் விருப்பு வெறுப்புகளை எம்மால் அறிய முடிகின்றது''

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார் அத்துடன் வடக்கு - கிழக்கு மக்களின் கருத்தை கம் உதாவ மூலம் அறிந்து கொண்டேன் என்றும், யுத்தம் விரைவில் முடிந்து விடும் என்றும் அவர் கூறினார்.

## விளையாட்டுப் போட்டிகள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவின் தடகட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 11-7-92 சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் திரு கெக்டர் ஜோசப் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

மேற்படி போட்டிகளுக்கு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்தி

## அதிபர்கள் கலந்துகொள்ளவும்

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சகல க. பொ. த (சா. த) வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை

## ஜெயலலிதாவிற்கு வெள்ளிச்சிம்மாசனம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, வெள்ளியிலான சிம்மாசனம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. 102 கிலோ வெள்ளியினால் செய்யப்பட்ட இந்தச் சிம்மாசனத்தில் பெறுமதிமிக்க இரத்தினக் கற்கள் பதியப்பட்டுள்ளதுடன் தங்க மூலாமும் பூசப்பட்டு இருக்கின்றது இந்தச் சிம்மாசனத்தின் பெறுமதி சுமார் பதின்மூன்று லட்சம் இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 10 விடுதலைப் புலிகள் மைசூரில்புகுந்துள்ளனராம்

(பெங்களூர்)

மைசூர் மாந்திய மாவட்டத்தில் ஒரு பெண் உட்பட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பத்துப் பேர் நுழைந்துள்ளனர் என்றும், அதையடுத்துப் பொதுமக்கள் உஷார்ப்படுத்தப்பட்டிருப்பதுடன் கேந்திர நிலைகளில் காவல் பலப்படுத்தப்பட்டிருப்பதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

கர்நாடகப் பொலிஸார் மேலும் கூறுகையில் கே. ஆர். சேகர்குளம் அணைக்கட்டு வெடிக்கவைக்கப்படலாம் என்று அஞ்சுவதாகவும், சுழியோடிகள் பயன்படுத்தும் காஸ் சிலிண்டர்களுடன் இந்த புலிகள் வந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## வீரச்சாவு



வீரவேங்கை
அறிவழகு



வீரவேங்கை
இளம்பிறை

## தமிழகத்தில் இலங்கை தமிழர் கைது சுவிஸ் தமிழ்ச் சங்கம் கண்டனம்

(பேர்ன்)

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதை சுவிட்சர்லாந்து தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி அமைப்பின் தலைவர் பொன் ராஜா அண்டன் பேர்ன் நகரில் உள்ள இந்தியத் தூதுவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வந்துள்ள தமிழர்களை கண்டபடி கைது செய்து தடுத்து வைத்திருப்பதை நியாயப்படுத்த முடியாதெனவும் முற்றிலும் வேண்டப்படாத இந்த நடவடிக்கைகளை நிறுத்துமாறும்,

இது கொடுமையானதும், அநீதியானதும் சகல விதமான மனிதத் தன்மைகளையும் மீறுவதுமாகும் எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சிலமாதங்களில் வட பகுதியில் மேற்கொள்ளப்படும் வான் தாக்குதல்கள். ஷெல் தாக்குதல்களினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே வடபகுதி தமிழர்கள் மீதான பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகின்றன

இவ்வாறான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அவர்களுடைய கஷ்டத்திலிருந்து காப்பதற்குத் தேவையான மருத்துவ உதவிகளை அனுப்பி வைக்குமாறு கோருவதாகவும் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளை நிறுத்தி தமிழர்கள் தமது தாயகத்தில் சாதாரண நிலையில் வாழ வழிவகுக்குமாறு இலங்கை அரசைக் கோருமாறு இந்தியத் தூதுவரையும் சர்வதேச சமூகங்களையும் இந்த அமைப்பு கோரியுள்ளது.

தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதையிட்டுக் கவலைப்படுவதாகவும் இலங்கையின் இன்றைய நிலையில் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை வேண்டப்படாததும் தேவையற்றதுமாகும் எனவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## காபூலில் கடும் சண்டை 100 பேர் பலி

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கிளர்ச்சிப் படைகளுக்கும், அரசுப்படைகளுக்குமிடையே கடும் சண்டை நடைபெற்றுவருகிறது

நேற்றுப் பிற்பகல் ஆரம்பமாகிய இச் சண்டையில் இதுவரை குறைந்தது நூறு பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் இருதரப்பினரும் பீரங்கிகள், ஏவுகணைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர் அதிபர் மாளிகைக்கு சுமார் 100 மீற்றர் தூரத்தில் குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்த போதிலும் குர்கான் திங்றுபானிக்கு ஆபத்து எதுவும் இல்லை.

## வவுனியா தமிழர் வீடுகளில் ஊர்காவல்படை கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரில் உள்ள தமிழர் வீடுகளில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இரவு வேளையில் நகரில் உலாவும் ஆயுதம் தரித்த குழுவினர் வீடுகளின் கதவுகளை உடைத்து பெறுமதிமிக்க பொருள்களை களவாடிச் செல்கின்றனர்.

வவுனியா நகரப் பகுதி வீடுகளில் தொடர்ந்து இடம் பெற்று வரும் இக் கொள்ளைச் சம்பவங்களினால் அப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர், குடியிருப்பு பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகளை உடைத்து கொள்ளையிடப்பட்டுள்ளது.

வீடுகளிலுள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் உள்ளநேரம் இச் சம்பவங்கள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிங்கள ஊர்காவல் படையினர்தான் இக்கொள்ளைகளில் ஈடுபடுவதாகவும், இவர்களுக்கு பொலிசார் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)

## ஐ. தே. முன்னணி நிதிசேகரிப்பு

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்களான லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா ஆகிய இருவரும் கடந்த 27 ஆம் திகதி கட்சிக்கு நிதி சேகரிப்பதற்காக தம் ஆதரவாளர்களுடன் இரத்தினபுரி நகரில் கால் நடையாகச் சென்றனர்

சுமார் மூன்று. நான்கு மணித்தியாலங்களில் இரத்தினபுரி நகரில் வாழும் மாணிக்கக்கல் வர்த்தகர்கள் பத்துலட்சம் ரூபாவை நிதியாக வழங்கினர்.

## உடன் திரும்ப உத்தரவு

மன்னார் தீவுக்கு இதுவரை கடமைக்குத் திரும்பாத அரச ஊழியர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார் அரச செயலகத்திற்கு சமூகமளிக்கும்படி கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## சிறிலங். தேசியவருமானம் 3.7 வீதத்தால் வீழ்ச்சி

(கொழும்பு)

சிறிலங்காவின் தேசிய வருமானம் 3.7 வீதத்தினால் குறைவடைய இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது போப்ஸ் அண்ட் வாக்கர்ஸ் என்னும் தனியார் கம்பனி ஒன்று நடத்திய கணிப்பீட்டிலிருந்து இது தெரியவந்துள்ளது

மானம் 4 8 வீதத்தினால் குறைவடைந்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை கடுமையான நாணயக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாவிடில் 17 வீதத்தினால் பணவீக்கம் பெருகும் என்றும் இக்

யாளர் திரு. து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினரா. கலந்துகொள்ள உள்ளார்

## விமான சேவை

(கொழும்பு)

இலங்கைக்கும்-இந்தோனேசியாவுக்கும் இடையில் பன்னிரண்டு வருடகால விமான சேவைகள் உடன்படிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தையை நடத்துவதற்காக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறிவிரணதுங்கா தலைமையிலான தூதுக்குழுவொன்று இன்று ஜகார்த்தா செல்லவுள்ளது.

ளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்களை 07-07-92 நாளை பிற்பகல் 2 மணிக்கு யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்குச் சமூகம்தரும்படி கோட்டக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. மகேசவேலு கேட்டுக்கொள்கிறார்.

நாளை அங்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் அவர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார். அங்கு 1992 க.பொ.த (சாதாரண) தரப்பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறும்.

எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதல்களால் பெரிய அளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## 50 கலிபர் தாக்குதல்

யாழ். குடா நாட்டின் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நகரின் கரையோரங்களை அண்டிய பகுதிகளை நோக்கி நேற்று நண்பகல் 50 கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர் (பா)


## திருமண அழைப்பு

அன்புக்குரியீர்!

நிகழும் எழில் வருஷமாம் ஆங்கீரச ஆண்டில் இனிய ஆனித் திங்கள் 25ஆம் நாளில் (09-07-1992) வியாழக்கிழமை நண்பகல் 11 48 இலிருந்து 12 12 வரை மங்கலம் மலிந்திடும் மாண்புறு சுபமுகூர்த்த வேளையில்


| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**சிவராஜா**<br>(சவூதி அரேபியா) | எமது புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>**குணவதி (குணா)**<br>(யாழ்.மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத்தலைவி) |

இருவர் கரங்களும் சுற்றத்தார் வாழ்த்திட உயர்ந்தோர் ஏற்றிட நீர்வேலி காமாட்சி அம்பாள் தேவஸ்தான கலாசார மண்டப அரங்கினில் இறைவன் அருளால் இனிதே இணைய இருப்பதால், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் மென்மலர் தூவி மனதால் வாழ்த்த அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| திருமதி இராமலிங்கமும்<br>குடும்பத்தினரும்<br>செல்வம் மிக் ஒழுங்கை,<br>இமையாணன், உடுப்பிட்டி. | திருமதி குமாரசாமியும்<br>குடும்பத்தினரும்<br>காமாட்சி அம்பாள் கோயிலடி,<br>நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |

இருவீட்டார் அழைப்பு (தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை) (2758)

## வீரவேங்கை மருதன்

03-07-1992 அன்று புல்லாவெளிப்பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரவேங்கை அறிவழகு (சுப்பிரமணியம் செந்தில்நாதன், ஓமந்தை, நாவற்குளம், வவுனியா வீரச்சாவு அடைந்தார்.

04-07-1992 அன்று புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தின் எறிகணை தாக்குதலில் வீரவேங்கை இளம்பிறை (சின்னத்தம்பி விக்னேஸ்வரமூர்த்தி முகாவில் இயக்கச்சி) வீரச்சாவு அடைந்தார்.

03-07-1992 அன்று புல்லாவெளி மோதலில் விழுப்புண் அடைந்த வீரவேங்கை மருதன் (அந்தோனிப்பிள்ளை ரொபின் ஜோன்சன் கன்னாட்டி, வவுனியா) 04-07-1992 அன்று வீரச்சாவு அடைந்தார்.

இம்மூன்று வீரவேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### இயக்கச்சியில்

மரணமடைந்தனர். இதில் ஒரு விமானியின் உடல் புலிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. விமானம் வெடித்துச் சிதறியதால் பரந்து கிடக்கும் சிதைவுகளைப் புலிகள் தேடி வருகின்றனர்.

### யாழ். குடா நாடு

# எதிர்பார்த்ததற்கு முன்பே கட்டுப்பாட்டில் வருமாம்

பாதுகாப்புப்படையினர் எதிர்பார்த்த காலத்தை விட அதற்கு முன்னதாகவே யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்பதை நடைபெற்று வரும் பலவேகய இரண்டு நடவடிக்கை உணர்த்துவதாக அந்த நடவடிக்கைக்குப் பொறுப்பான உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீன விடு.இயக்க தளபதி சுட்டுக்கொலை

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் இனந் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். லெப். கேணல் அன்வர் மாலி என்னும் பத்தா இயக்கத்தின் தளபதியான இவர் துறைமுக நகரமொன்றின் வழியாக காரில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது வழி மறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் இச்சம்பவத்தில் அவரது மூன்று மெய்க்காவலர்களும் கொல்லப்பட்டனர்.

### கரும்புலிகள்

வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளுக்கான கூட்டம் மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும் வடமராட்சிப் பிரிவுக்கான கூட்டம் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும் மற்றும் தென்மராட்சியிலும் இக்கூட்டங்கள் நேற்று மாலை நடைபெற்றது. இக்கூட்டங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர். விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் பலரும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### ஊர்காவற்

நபர் குடும்பத்தகராறு காரணமாக ஏற்பட்ட விரக்தியை அடுத்தே இச்செயலில் இறங்கியதாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

லிருந்து இது தெரியவந்துள்ளது. 1991 இல் இத்தேசியவரு

சணி பீடமல் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## மனு தள்ளுபடி

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள நளினியின் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இவ்வழக்கின் விசேட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள எம்.எம். சித்தீக்கை மாற்றவேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்திருந்த மனுவே நிராகரிக்கப்பட்டதாகும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**05. 07. 1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கங்கள் 4733

இராணுவம் வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

24-3364, 41 9327 41-9579. 24-7961, 40-630 40-1688 27-7794 28-8654, 47-1797 26 7286 27-5058, 28-1992 27-4673 26 423 26-6417, 26-403. 40-1714 24-8079 27-2016. 26-3893. 36-9139, 37-1629, 25-2735, 36-4552 25-2906, 71-5115.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

24 8429 28 5800, 24 6533, 26-8427, 41-8557. 28-1901 24-9490, 26-594 28-9186 28 9259, 28-2511, 40-1653 27-6769, 24-6350, 41-4418, 24-4481, 24-5127, 28-1677 28-9634, 26-8917.

04-07-1992 அன்று வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கத்தில் 28-1025 என்பதை 28-1085 எனத் திருத்திக் கொள்ளவும்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது